நாடக வெளி வழங்கும்

தமிழ் நாடகம்

# ஊழிக் கூத்து

எழுத்து, இயக்கம்: வெளி ரங்கராஜன்



30.03.2008

ஞாயிறு மாலை 7 மணி

அலையான்ஸ் ப்ரான்சேஸ் அரங்கம்

24, காலேஜ் ரோடு சென்னை–6

அனைவரும் வருக

நமது காப்பியங்கள் குறிப்பிட்ட மையச் சரடுகளை இலக்காகக் கொண்டு இயங்குவது போன்ற தோற்றங்களை உருவாக்கினாலும் அவைகளுக்கு இடையே பலவாறாகப் பிரிந்து செல்லும் சிறுகதையாடல்களும் பாத்திரங்களின் இயக்கங்களும் சார்புகள் கடந்த ஒரு வாழ்வுணர்வை சாத்தியப்படுத்தி ஒரு இலக்கியப்படைப்பின் நம்பகத்தன்மையை உறுதி செய்கின்றன. அவைகளின் ஊடாக வெளிப்படும் மனித உயிர்களின் வேட்கைகள் சார்ந்த போராட்டங்கள் தமக்குரிய உயிரோட்டம் கொண்டு முடிவற்றதாகவும் கட்டுகள் அற்றதாகவுமே சித்தரிப்பு கொள்கின்றன. வாழ்வின் அழகியல் சார்ந்த எல்லா நிலைப்பாடுகளும் அந்தப் போராட்டத்தில் கூர்மை அடைவதையும் அவை வலுவான குரல்களில் வெளிப்படுவதையும் இங்கு நாம் தொடர்ந்து அவதானிக்க முடியும். அவ்வகையில் தன்னுடைய பாரம்பரியத்தால் உருவான சுயம் சார்ந்த உடல் கொண்டாட்ட மனநிலைக்கும், சூழல் வலியுறுத்தும் உடல் துறவு மனநிலைக்கும் இடையே ஊடாடும் மணிமேகலை அவைகளைக் கடந்து செல்லும் முயற்சியில் தன்னுடைய சமூகப் பரிமாண விழைவுகளின் ஒரு இலக்கை நாடுகிறாள். மணிமேகலையைப் பின்தொடரும் பல்வேறு வேட்கைகள் பல நிர்ப்பந்தங்களை அவளுக்கு உருவாக்கினாலும் தெளிவையும், தீர்மானத்தையும் நோக்கிய அவள் பயணம் முடிவற்றதாக இருக்கிறது. வேட்கைகளும் நிர்ப்பந்தங்களும் நிறைந்த பெண் மாதிரியின் ஒரு சமகாலக் குறியீடாக மணிமேகலையின் சித்திரம் விரிவு கொள்கிறது. நடன உடலும், தீயும், நீரும் நனவிலி மனத்தின் தொன்ம மாதிரிகளாய் உருக்கொள்கின்றன.

மணிமேகலை : தேவி
சுதமதி : சஜீனா
உதயகுமாரன் : கார்த்திகேயன்
எட்டிகுமரன் : உபேந்திரா
காஞ்சனன் : ஸ்ரீஜித்
மணிமேகலா தெய்வம் : சந்திரா
பேய்கள் : கோபி, வெங்கடேசன், விஜயகுமார், ஸ்டெல்லா

மற்றும் குடிமக்கள், நடனப்பெண்கள்

இசை : உஷா நரசிம்மன் (ப்ரஹத்வனி)
ஒளி : பாஸ்கர்
அரங்க அமைப்பு : பேராச்சி புருஷோத்தம்
ஆலோசனை, உதவி : ஓவியர் கிருஷ்ணமூர்த்தி, ஜெயராவ், காந்திராஜன்

இயக்கம் : வெளி ரங்கராஜன்